Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 045 · வெள்ளிக்கிழமை Friday · 15.05.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# மகளிர் உரிமைத் தொகைத் திட்ட மறுசீரமைப்புக்கு அவகாசம் தேவை

## முதலமைச்சர் விஜய் தகவல்





சென்னை: "பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது. ஆனால், மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர்உரிமைத்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும்." என தமிழக முதல்வர் விஜய்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகைபயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும்.

பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது.

மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் நேரடியாக வரவு வைக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த பிப்ரவரி 13-ம் தேதியன்று, கலைஞர் மகளிர் உரிமைத்தொகைதிட்டத்தின் பயனாளிகளான 1.31 கோடி பேருக்கு ரூ.5 ஆயிரத்தை விடுவித்தது அப்போதைய திமுக அரசு. அது மூன்று மாதத்துக்கான முன்பணம் மற்றும் கோடை கால சிறப்புத் தொகை என விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என அப்போதைய முதல்வர் ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்.

அதேபோல், அதிமுகவும் தனது தேர்தல் அறிக்கையில் தற்போது மகளிருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகை, ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தது.

அந்தவரிசையில் தவெக தனது தேர்தல் அறிக்கையில் 65 வயது வரையிலான அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.2500 வரவு வைக்கப்படும் என்றது. இது பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால், இப்போது பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது என்று கைவிரித்துள்ளது.

# "தேர்தல் தோல்விக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன்"

## தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பேச்சு




சென்னை: "இந்த தேர்தலில் நடந்திருப்பது புதுவிதமான கவர்ச்சி மாயாஜால சுனாமி. சுனாமி என்றால் சாகசமோ, சாதனையோ கிடையாது. பெரும் பாதிப்பு என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். தமிழக நலன்களைப் பாதித்திருக்கும் சுனாமி பேரழிவு இது" என திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும், "கட்சியின் தலைவர் என்ற முறையில், நானே இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெற்ற திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் உரையாற்றினார். பேசிய அவர், "நடந்து முடிந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இப்போது அமைந்திருக்கும் அரசும், கூட்டணிக் கட்சிகளின் தயவால்தான் ஆட்சியை அமைத்திருக்கிறது. நமது கூட்டணியுடன் சேர்ந்து வெற்றி பெற்றவர்களின் ஆதரவோடுதான் ஆட்சி அமைந்திருக்கிறது.

நமக்குபெரும்பான்மை கிடைக்வில்லையேதவிர, கணிசமான எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்திருக்கிறது. பொது வாழ்க்கைக்கு வந்தால் வெற்றி தோல்வி சகஜம். ஏற்ற இறக்கங்கள் இருக்கும். அதுதான் அரசியல். இந்தப் பக்குவம் வேற யாரையும் விட நமக்குத்தான் அதிகம். இதுதான், அண்ணா மற்றும் கருணாநிதி நமக்கு கற்றுக் கொடுத்தப் பக்குவம். கட்சியின் தலைவர் என்ற முறையில், நானே இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இதுதான் நிதர்சனம். தோல்வியின்போது ஆதங்கத்தை கொட்டுவது இயல்பானதுதான். ஆனால் அது பழியாக இருக்கக் கூடாது. ஆய்வு செய்வது அவசியம்தான் ஆனால் அடுத்தவர் மீதான அவதூறாக இருக்கக் கூடாது.

இந்த தேர்தலில் நடந்திருப்பது புதுவிதமான கவர்ச்சி மாயாஜால சுனாமி. சுனாமி என்றால் சாகசமோ, சாதனையோ கிடையாது. பெரும் பாதிப்பு என்ற அர்த்தத்தில் சொல்றேன். தமிழ்நாட்டின் நலன்களை பாதித்திருக்கும் சுனாமி பேரழிவு இது. தமிழ்நாட்டு மக்களை இதில் இருந்து, எப்படி மீட்டெடுக்கப் போகிறோம் என்பதைப் பற்றி யோசியுங்கள். எங்கு கோளாறு நடந்தது? எங்க மெத்தனம் ஏற்பட்டிருக்கிறது? என்பதுதான் முக்கியம். இதை ஆய்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் தனிப்பட்ட பல பிரச்சினைகள் இருக்கிறது. இவைகளைப் பரிசீலித்து, ஆய்வு செய்ய வேண்டும். சுழல்தானே தவிர, நாம் மீண்டெழ முடியாததோல்வி அல்ல. இனி கவனத்துடன், ஒற்றுமையாக செயல்பட வேண்டும். அதற்கு முன்னர் நாம் நம்மை, சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தோல்விக்கான காரணங்கள் குறித்து, தொகுதிவாரியாக, நமது அனைத்து மட்ட நிர்வாகிகளிடமும் கருத்து கேட்க வேண்டும். சார்பில் கள ஆய்வு நடத்தி அறிக்கை தர ஒரு குழுவை அமைக்கப் போகிறேன். அவர்கள் தமிழ்நாடு முழுவதும், தொகுதி வாரியாக, எல்லா தரப்பு நிர்வாகிகளையும் சந்தித்து பேசி அடுத்த 20 நாட்களுக்குள் எனக்கு அறிக்கை தருவார்கள். தொண்டர்கள் வெளிப்படையாக தகவல் கூற தனி 'வெப்சைட்' நாளையே அறிவிக்கப்படும். தலைமைக் கழகத்தால அமைக்கப்படும் விசாரணைக் குழு, வெப்சைட் மூலமாக கட்சியின் தொண்டர்கள் மற்றும் நம் மேல் அக்கறை கொண்ட பொதுமக்கள் சொல்லும் ஆலோசனைகளையும் வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு முறையில் மிகப்பெரிய மாற்றத்த கொண்டு வர இருக்கேன். அந்த மாற்றம்தான், இன்னும் ஒரு நூறாண்டுக்கு உயிர்ப்புடன் வைத்திருக்க போகிறது. இந்த தேர்தல் முடிவுகளுக்கு பிறகு, மாநாடுகள் - பொதுக் கூட்டங்கள் - ஆர்ப்பாட்டங்கள் இதையெல்லாம் தாண்டிய களமாக சமூக வலைத்தளங்கள் உருவெடுத்திருக்கிறது. இதை நான் கடந்த ஐந்தாண்டுகளில் பல முறை வலியுறுத்தியுள்ளேன். சட்டமன்றத்தில் முறையான - திறமையான - கட்சியாக நாம் செயல்பட வேண்டும். நமது அரசியல் எப்படி இருக்க வேண்டுமென்றால், கடந்த ஐந்தாண்டுகளில் நாம் உருவாக்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்பட வைக்க வேண்டும். அனைத்து நிர்வாகிகளிடமும் நான் வலியுறுத்தி பேசுவது, நிர்வாகிகள் ஒற்றுமைதான். கோஷ்டி அரசியலை விட்டுட்டு, எல்லாரையும் அரவணைத்துப் போக வேண்டும். நமக்குள்ளேயே ஒற்றுமை இல்லையென்றால், வெற்றி என்பது சாத்தியம் இல்லை. மாவட்டச் செயலாளர்கள்தான் மாவட்டத்துக்கு முக்கியம். அதை நான் மறுக்கவில்லை. அதற்காக மாவட்டச் செயலாளர்கள் மட்டுமே முக்கியம் என ஆகிவிடக் கூடாது. எல்லாருமே முக்கியம்தான். ஒருவேளை யாராவது, "என்னால செயல்பட முடியாது" என நினைத்தால், மனப்பூர்வமாக முன் வந்து விலகிக் கொள்ளலாம். இந்த தோல்வியை நினைத்து யாரும் வருத்தப்பட வேண்டாம். நாம் பல வெற்றிகளுக்குச் சொந்தக்காரர்கள். நமது இந்த தோல்வி தற்காலிகம்தான்" என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, மதுரை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய 7 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ) இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி, இன்று பகல் அதே பகுதிகளில் நிலவுகிறது.

இதுதவிர, சுமார் 0.9 கிமீ உயரத்தில், ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியின் மையப்பகுதிகளிலிருந்து தெற்கு மத்திய மகாராஷ்டிரா வரை, வடக்குதமிழகம், ராயலசீமா மற்றும் வடக்கு உள் கர்நாடகா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்தத் தாழ்வுப் பாதை (Trough) நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் வியாழக்கிழமை (மே 14) இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், தேனி மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் மே 15-ம் தேதி முதல் மே 20-ம் தேதி லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மே15-ம்தேதிகோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 7 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

மே 18-ம் தேதி நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், மே 17-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 6 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், மே 18-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி ஆகிய 7 மாவட்டங்களிலும், மே 19-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி 7 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழ்நாட்டின் முதலமைச்சராக சாதி மதம் பணம் இல்லா தமிழகத்தை வென்ற தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் முதலமைச்சராகபதவியேற்றநிலையில்மதுரைபழங்காநத்தம்பகுதிசெயலாளர்ஸ்ரீராம்மற்றும்இணைவட்டச்செயலாளர் முனீஸ்வரன் இளைஞர் அணி தலைவர் ஐயப்பன் இளைஞரணி செயலாளர் பசுபதி மற்றும் கணேசன் நாகராஜ் ,வினோத் ,சுந்தர் ஆகியோர் கலந்துகொண்டு கட்சி நிர்வாகிகள் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்



கோவை ராமநாதபுரம் பகுதியில், சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு கைத்தறி நெசவாளர்களுக்கு அஞ்சல் துறை மூலம் காப்பீடு திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுமார் 200க்கும் மேற்பட்டோருக்கு மருத்துவ காப்பீடு, விபத்து காப்பீடு, உள்ளிட்ட அத்தியாவசிய காப்பீடுகள், இலவசமாக சில்க் வில்லேஜ் கைத்தறி நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சில்க் வில்லேஜ் நிறுவனர் கைத்தறி முருகேசன், பங்குதாரர் பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து காப்பீட்டு திட்டத்தில் பயணடைந்த அனைவரும், இலவசமாக காப்பீடுகளை வழங்கிய சில்க் வில்லேஜ் கைத்தறி நிறுவனத்திற்கு கைத்தறி நெசவாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பெரும் மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் குடிநீர் திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மை, திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (14.05.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் குடிநீர் திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மை, திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோடை காலத்தில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்வது,குடிநீர் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்படும் குடிநீர் அளவு. மற்றும் நிலுவையில் உள்ள குடிநீர்திட்டப்பணிகளை விரைந்து முடிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

மேலும், மாநகராட்சி. நகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் தற்பொழுது நிலை குறித்தும் கேட்டறிந்து, பணிகளை குறித்த காலத்திற்குள் முடிந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் குறித்து கேட்டறிந்து சாலையோரமாக உள்ள குப்பைகளை விரைந்து அகற்றும்படி அறிவுரை வழங்கினார். இக்கூட்டத்தில் ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின் நகராட்சி ஆணையாளர்கள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை முகாசிப்பிடாரியூர் ஊராட்சி ஒன்றிய அதிமுக சார்பில் (மே.13) அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட விவசாயப் பிரிவு இணைச் செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமையில், அம்மா பேரவை இணைச் செயலாளர் கேபிள் சி.நாகராஜ் முன்னிலையில் நடந்த இக்கூட்டத்தில், தலைமைக்கு விரோதமாக செயல்படும் எம்எல்ஏக்கள் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட 11 முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.






மதுரை ரயில் நிலையம் பின்புறம் மேற்கு நுழைவாயில் அருகே டக்சின் ரயில்வேஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் DREU CITU வின் ஆண்டுதோறும் 2% பதவிகளை குறைக்கும் கொள்கையை கைவிட கோரி DREUCITU வின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோட்ட பொறியாளர் சரவணன் தலைமை வகித்தார் மத்திய உதவி தலைவர் திருமலை ஐயப்பன் துணை பொதுச்செயலாளர் கார்த்திக் சங்கிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர் கோட்டத் தலைவர் ராஜு கோட்ட செயலாளர் சிவக்குமார் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் லெனின் உட்பட பலர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 1990ல் ரயில்வே துறையில் 16.5 லட்சமாக இருந்த ஊழியர்கள் எண்ணிக்கையை வருடா வருடம் பணி ஓய்வில் செல்வோர் பதவிகளை நிரப்பாமல் சரண்டர் செய்து தற்போது 12.29 லட்சமாக குறைத்து இருப்பது, பதவிகள் சரண்டர் செய்வதினால் CRC பதவி உயர்வு பறிபோகும் அனைத்து பிரிவுகளிலும் 8 மணி நேர வேலையை உறுதிப்படுத்தவும் ரயில்வேயில் உள்ள உடனடியாக காலிப் பணியிடங்களை நிரப்பிடவும் புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்யவும் பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தவும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்

## கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள

# ஸ்ரீராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரியில் 16ம் தேதிவரை மூன்று நாட்கள், மே கார்னிவல் 2026 எனும் தலைப்பில் பல் சிகிச்சை மற்றும் பல் குறித்த தகவல் கண்காட்சி நடைபெற உள்ளது



கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு பொதுமக்களுக்கு பல்வேறு பல் சிகிச்சைகள் குறித்த தகவல்களை வழங்கும் வகையில் மே கார்னிவல் 2026 எனும் தலைப்பில் மூன்று நாட்கள், பல் சிகிச்சை தகவல், மற்றும் கண்காட்சியின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனை எஸ்என்ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர் டாக்டர், சுந்தர் ராமகிருஷ்ணன், இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன் சௌந்தர ராஜ், ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தனர். தொடர்ந்து ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை யின் முதல்வர் டாக்டர் தினகர் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

ஆண்டுதோறும் பல் சார்ந்த தகவல்களையும், பல்சார்ந்த சிகிச்சை முறைகள் குறித்தும், பொது மக்களுக்கு ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பில் பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி வருகின்றதாகவும், மூன்றாவது ஆண்டாக நடத்தப்படும் இந்த விழிப்புணர்வு, பொதுமக்களிடையே வாய்நலன் குறித்து எடுத்து கூறி, பல் சிகிச்சைகள் குறித்த தகவல்களை அவர்களுக்கு, வழங்குவதே நோக்கமாக கொண்டுள்ளது என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மூலமாக, பொதுமக்களுக்கு வாய்நல விழிப்புணர்வு சொற்பொழிவுகள், பல் சிகிச்சை கண்காட்சி, பல் விழிப்புணர்வு விளையாட்டுப் பகுதி, சரியான பல் துலக்கும் முறைகள் குறித்த நேரடி விளக்கங்கள், மற்றும் பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன எனவும், இந்த நிகழ்ச்சி பொதுமக்களுக்கு பல் சிகிச்சைகள் குறித்த தெளிவான தகவல்களை வழங்கி, அவர்களின் வாய்நலத்தை மேம்படுத்த உதவுகிறது என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் கலந்து எஸ்என்ஆர் அறக்கட்டளையின் தலைமை செயல் அதிகாரி சிவி ராம்குமார், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத்துவ இயக்குனர் டாக்டர் ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் அழகப்பன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை புரோசோன் மாலில் மே 17 ந்தேதி தி சிக்கூ எனும் அமைப்பு நடத்தும் ஆதரவற்ற நாய்,பூனைகள் உள்ளிட்ட செல்லப்பிராணிகளை தத்தெடுக்கும் நிகழ்வு

பள்ளி மாணவர்கள் ஒருங்கிணைத்தும் நடத்தும் இதில் செல்லப்பிராணிகள் பிரியர்களுக்கெ ன பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக ஒருங்கிணைப்பு குழுவினர் தெரிவித்தனர்.





தி.சிக்கூ புராஜக்ட் சார்பில் கோவை புரோசோன் மாலில் மே 17,அன்று செல்லப்பிராணி தத்தெடுப்பு இயக்கம் எனும் அமைப்பை உருவாக்கி, பூனை, நாய் போன்ற செல்லப்பிராணிகளை தத்தெடுக்கும் நிகழ்ச்சியாக நடைபெற உள்ளது..

இந்நிலையில் இது தொடர்பானசெய்தியாளர்கள்சந்திப்புகோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள தனியார் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது..

இதில் ,சிக்கூ புராஜெக்ட் நிறுவனர்ளான அத்வைத்ராவ்,அம்ரிதா ரமேஷ் மற்றும் நினாத், நேஹா ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

சிக்கூ திட்டம் சார்பாகநடைபெறும்,செல்லப்பிராணி தத்தெடுப்பு இயக்கமே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம், பாதுகாப்பில்லாமல் இருக்கும் தெருநாய்கள் மற்றும் பூனைகளுக்கு பாதுகாப்பான நிரந்தர வீடுகளை கண்டுபிடிப்பதே இந்த குழுவின் நோக்கம் என தெரிவித்தனர்..

குறிப்பாக செல்லப்பிராணிகளை அதிக விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக தெருவில் சுற்றி திரியும் ஆதரவில்லாமல் இருக்கும் பிராணிகள் தத்தெடுப்பை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கம் என தெரிவித்தனர்.. இதில் ஆதரவற்ற செல்லப்பிராணிகளை தத்து கொடுப்பதற்கு முன்பாக முறையான மருத்துவ பரிசோதனைகள் செய்து தடுப்பூசிகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடைமுறைகளை கடைபிடிப்பதாக தெரிவித்தனர்.. பொதுமக்களுக்கு சமூக பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் விலங்குகள் நலன் குறித்து விழிப்புணர்வை இந்த நிகழ்வின் வாயிலாக ஏற்படுத்த இருப்பதாக தெரிவித்தனர்..

இதில், பல்வேறு விலங்குகள் நல அமைப்பினர் இணைந்து விலங்குகளை பாதுகாக்கவும், அன்பான குடும்ப ங்களுடன் இணைக்கவும் நடத்தப்படும் இந்த விழாவில், மீட்கப்பட்ட நாய்கள்,பூனைகளுடன் மக்கள் சந்திப்பு, சமூக விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள்,செல்லப்பிராணிகளுடன் ராம்ப் வாக் போன்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடைபெற உள்ளதாக அத்வைத் ராவ் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 2% உயர்வு: முதல்வர் விஜய் உத்தரவு





சென்னை: தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி,மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகராக 01.01.2026 முதல் கணக்கிடப்பட்டு 60 சதவீதமாக உயர்த்தி வழங்க முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: முதல்வர் விஜய் தலைமையிலான அரசு, மக்கள் நலனை முன்னிறுத்தி மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதிமொழி அளித்துள்ளது. இந்தத் திட்டங்களை வடிவமைப்பதிலும், அவற்றை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துவதிலும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றனர்.

அவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு,ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.01.2026 முதல் 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளநிலையில்,மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களும் அதனால் பயன்பெறும் வகையில், , 01.01.2026 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்க முதல்வர் பரிசீலித்து உத்தரவிட்டுள்ளார்.

இதனால் 58% ஆக உள்ள அகவிலைப்படி 2 சதவீதம் உயர்ந்து 01.01.2026 முதல் 60 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 1,230 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள்,ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்று அரசு செய்திக் குறிப்பில் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சேலத்தில் தொடங்கப்பட்டது முதல்வர் விஜய் அறிவித்த 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம்

சேலம்: பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழக முதல்வர் விஜய் அறிவித்த 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டம் (Singappen Special Force SSF) சேலம் மாநகராட்சியில் இன்று முதல் தனது பணியைத் தொடங்கியது. முதற்கட்டமாக, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளபகுதிகளில்பெண் காவலர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழக முதல்வராக பதவி ஏற்றதும்,முதல்வர் விஜய் பெண்கள் பாதுகாப்புக்கு என தமிழகத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தொடங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில் தமிழகத்தில் முதல்முறையாக சேலம் மாநகர காவல் துறையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் , சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி மேற்பார்வையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை" அமைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சூரமங்கலம் சரக உதவி ஆணையர் ரமனி ராமலட்சுமி கண்காணிப்பில், எஸ் ஐ, அருள்மொழி. எஸ் எஸ் ஐ, க்கள் அம்சவள்ளி, சத்தியவதி, பெண் தலைமை காவலர்கள் பிரேமலதா, மங்கையர்க்கரசி ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதிரடிப்படை வாகனத்தின் ஓட்டுநர் மட்டும் ஆண் காவலர் ஆவார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் (SSF) செயல்பாடுகள்:

குற்றச்சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து கண்காணித்தல், .பொது இடங்களில் தொடர்ந்து ரோந்து மேற்கொண்டு, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல், பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள். கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்வது.

சட்டவிரோத மற்றும் பெண்களுக்கு எதிரான செயல்களை தடுக்க விரைந்து நடவடிக்கை எடுப்பது, பெறப்படும் புகார்களுக்கு உடனடி மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது.

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் நபர்களை மீட்டு அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்வது,தேவையான உதவிகள் மற்றும் ஆதரவுகள் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்வது, சமூக நலத்துறை கல்வித்துறை மற்றும்அரசு சாராதொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது.

சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் இணைத்து பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுவது, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தடுப்பு மற்றும்பாதுகாப்பு உத்திகளை முதன்மை இலக்காகக் கொண்டு செயல்படுவது, சிங்கப்பெண்சிறப்பு அதிரடிப்படையின் நோக்கங்கள் ஆகும்.

சிங்கப்பெண்சிறப்பு அதிரடிப்படைமுதற்கட்டமாக காவல்துறை தலைமையக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

இச்சிறப்பு படையினருக்கு தேவையான நான்கு சக்கர வாகனம் சாதனங்கள், Body Worn Camera மற்றும் இதர வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பணியை தொடங்கி வைத்த சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி அதிரடிப்படையினருக்கு ஆலோசனைகளை வழங்கினார் பின்னர் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி செய்தியாளர்களிடம் பேசுகையில், "பெண்கள் பிரச்சினை தொடர்பாக புகார் செய்தால் அல்லது அவசர அழைப்பிற்கு தொடர்பு கொண்டால் உடனே சிங்கப்பெண் அதிரடி படை அங்கு சென்று தேவையான உதவிகள் மற்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

# "எங்களால் அதிமுக அலுவலகத்துக்கு எந்த பாதிப்பும் வராது" சி.வி.சண்முகம் பேச்சு



சென்னை: "அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படாது. எங்களால் அதற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது, என அதிமுக எம்எல்ஏ சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

அதிமுகவில் உட்கட்சிப் பூசல் நிலவி வரும் நிலையில், அரசியல் களம் பரபரப்புடன் காணப்படுகிறது. இந்நிலையில், சி.வி.சண்முகம் செய்தியாளர்களிடம் பேசும்போது, "இந்த ரத்தம் அதிமுகவின் ரத்தம். எங்களுக்கு பல பதவிகளைக் கொடுத்து அழகு பார்த்த இயக்கம் அதிமுக.

சட்டப்படி அதிமுகவின் உண்மையான தொண்டன் என்பதை நிரூபித்ததன் பின்னரே என் கால் அதிமுக அலுவலகத்தில் பதியும். அதிமுக அலுவலகம் எங்கள் கோயில். அதிமுக அலுவலகம்மீது ஒருதூசிகூட படவோ, பாதிப்பு ஏற்படவோ அனுமதிக்க மாட்டோம். யாரும் அச்சப்பட வேண்டாம்" எனப் பேசினார். அதிமுக பிளவுபட்டுள்ள நிலையில், தங்கள் தரப்பு கொறடாவை அங்கீகாரம் செய்ய வேண்டும் என சட்டப்பேரவைத் தலைவரை இபிஎஸ்தரப்பு மற்றும் சி.வி.சண்முகம் தரப்பு தனித்தனியாக நேரில் சென்று மனு அளித்துள்ளது.

# குதிரை பேரம் நடத்த தவெகவுக்கு அவசியம் இல்லை: அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்



சென்னை: குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் தவெகவுக்கு இல் லை. அதற் கான தேவையும் எழவில்லை என்று அமைச்சர் சிடி.ஆர். நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தலைமைச்செயலகத்தில்செய்தியாளர் களிடம் அவர் நேற்று கூறிய தாவது: முதல்வர் விஜய் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்று ஆதரவு தெரிவித்து 144 எம்எல்ஏ க்கள் வாக்களித்துள்ளனர்.

எந்த நோக்கத்துக்காக மக்கள் விஜய்யை முதல்வர் ஆக்கினார்களோ, அந்தஎண்ணம்நூறுசதவீதம் நிறைவேற்றப்படும். சட்டப்பேரவை தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது. இந்த ஆட்சியில்,அனைத்து மக்கள் நலத்திட்டங்களும்தொய்வின்றித் தொடரும்.

மற்ற கட்சித் தலைவர்களை சந்தித்து பேசவே தான் அதிமுக நிர்வாகிகளையும் விஜய் சந்தித்தார்.இதில்குதிரைபேரம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை.

நீட் தேர்வில் கடந்த 5, 6 ஆண்டுகளாகவே தொடர்ந்துகுளறுபடிகள் நடக்கின்றன. இதனால் லட்சக் கணக்கான மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடத்தப்பட்டாலும், நீட் தேர்வு தேவையில்லை என்பது தான் எங்கள் கட்சியின் உறுதியான நிலைப்பாடு. ஒரு சாதாரண தேர்வைக் கூட மத்திய அரசால் சரியாக நடத்த முடியவில்லை.தேர்வர்களை கடும் சோதனைக்கு உட்படுத்தும் மத்திய அரசு, வினாத்தாள் கசிவைதடுக்க இயலாத நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# இன்று இல்லை என்றால், நாளை வெல்வோம்: வைரலாகும் சீமான் ஆடியோ பேச்சு



சென்னை: 'இன்று இல்லைஎன்றால்,நாளை வெல்வோம் என கட்சியினருக்கு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசிய ஆடியோ சமூக வலை தளங்களில் பரவி வைரலாகி வருகிறது.

தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தனித்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் இழந்தது.

இந்நிலையில் தேர்தலில் படுதோல்வியடைந்ததை அடுத்து, கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கட்சியினருக்கு ஆறுதல் தெரிவித்த ஆடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி அதிகளவில் பகிரப்பட்டு வருகிறது.

அந்த ஆடியோ பதிவில் சீமான் கூறியிருப்பதாவது : நான் நலமாக இருக்கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள். இன்றைக்குஇல்லைஎன்றால், நாளை வெல்வோம். அடுத்த 5 ஆண்டுகள் இருக்கிறது. களத்தில் நின்று வேலை பாருங்கள். மக்களோடு மக்களாக நில்லுங்கள். களத்தில் இருந்து வெளியேற வேண்டாம்.திரைக்கவர்ச்சியை நம்பி மக்கள் ஏமாந்துவிட்டார்கள்.அவரை(விஜய்) ஆட்சியில் உட்கார வைக்க வேண்டும் என்று நினைத்தார்கள். தற்போது அவரது ஆட்சியில் வாழ்ந்து பார்ப்பார்கள் தானே. எனவே, அடுத்து நமக்குத் தான் வாய்ப்பு. தைரியமாக இருங்கள். இவ்வாறு அதில் பேசியுள்ளார்.

# ஐபிஎஸ் அதிகாரிகள் மாற்றம்: சைபர் க்ரைம் டிஜிபியாக பால நாகதேவி நியமனம்



சென்னை: சைபர் க்ரைம் பிரிவு டிஜிபியாக பால நாகதேவி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், சில ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.இதுதொடர்பாககூடுதல்தலைமைச் செயலர் கே.மணிவாசன் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, உளவுப் பிரிவு டிஜிபியாக உள்ள பாலநாகதேவிதற்போது சைபர் க்ரைம் பிரிவு டிஜிபியாக நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக்குற்றப் பிரிவுடிஜிபியாகஇருந்த பாலநாகதேவி, கடந்த மார்ச் மாதம் உளவுப் பிரிவு டிஜிபியாக நியமிக்கப்பட்டார். உள்துறைச்செயலராக இருந்த தீரஜ்குமார் இதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இரண்டு மாதங்களில் பால நாகதேவியின் பொறுப்பு தற்போது மாற்றப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இதேபோல், வேலூர் சரக டிஐஜியாக இருந்த ஜி.தர்மராஜன் இப்போது சென்னை உளவுப் பிரிவு (செக்யூரிட்டி) டிஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென் சென்னை இணை ஆணையராக இருந்த பி.சி.கல்யாண் இப்போது சென்னை உளவுப் பிரிவு (இன்டர்னல் செக்யூரிட்டி)டிஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி சரக டிஐஜியாக இருந்த பி. சரவணன் இப்போது சென்னை சிஐடி உளவுத் துறை டிஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார். திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த ஜி.கே. உத்தவ்ராவ் இப்போது சென்னை குற்றப் பிரிவு உளவுத்துறையின் எஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருக்கும் மயில்வாகனன் இப்போது சென்னை சிஐடி சிறப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த மதன் இப்போது சென்னை சிறப்புப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

க்யூ பிராஞ்ச் கண்காணிப்பாளராக இருந்த கே.சண்முகம் இப்போது சிஐடி சிறப்புப் பிரிவு கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை குற்றப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக இருக்கும் மாதவன் இப்போது பாதுகாப்புப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை சட்டம் - ஒழுங்கு உதவி ஐஜியாக இருந்த சிலம்பரசன் இப்போது சிறப்புப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வீட்டின் உரிமையாளர் போல நடித்து வேறு ஒருவரின் வீட்டை குத்தகைக்கு விட்ட ஐ.டி பெண் ஊழியர் கைது



சென்னை: வீட்டின் உரிமையாளர் போல நடித்து, வேறு ஒருவரின் வீட்டை குத்தகைக்கு விட்டு பண மோசடி செய்த வழக்கில், ஐ.டி. பெண் ஊழியர் கைது செய்யப்பட்டார்.

சென்னை,ஓட்டேரி பகுதியைச்சேர்ந்தவர்குமார ராஜா (54). குத்தகைக்கு வீடு தேடி கொண்டிருந்தார்.அப்போது,சென்னை நம்மாழ்வார்பேட்டையைச் சேர்ந்த சங்கர் என்பவர் நம்மாழ்வார் பேட்டை, சுப்பராயன் மெயின் தெருவில் உள்ள வீடு ஒன்றை காண்பித்து, இந்தவீடு என்னுடையது தான். ரூ.4.5 லட்சத்திற்கு குத்தகைக்கு விட உள்ளதாக தெரிவித்தார். இதையடுத்து,குமாரராஜா கடந்த பிப். 13-ம் தேதி குத்தகை ஒப்பந்தம் போட்டு, சங்கரின் வீட்டில் அவரது மகள் நந்தினி (25) முன்னிலையில் ரூ.4.5 லட்சம் கொடுத்தார்.

பின்னர், சங்கர் வீட்டை ஒப்படைக்காமல் காலம் தாழ்த்தினார். அதன் பின்னர் தான், அந்த வீட்டின் உரிமையாளர் சங்கர் இல்லை என தெரிய வந்தது. இதையடுத்து, கொடுத்த பணத்தை திருப்பி கேட்டபோது, சங்கர் திருப்பி தரவில்லை.

இது குறித்து, குமார ராஜா தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில், பண மோசடி நடைபெற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, சங்கரின் மகள் நந்தினி நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விசாரணையில் நந்தினி ஐ.டி. நிறுவனத்தில் வேலை செய்து வருவது தெரியவந்தது. தலைமறைவாக உள்ள சங்கரை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் கூகலூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசு உதவிபெறும் காந்தி கல்வி நிலையம் மேல்நிலைப் பள்ளி 202526 ஆம் கல்வியாண்டில் பிளஸ் 2 தேர்வில் 100 சதவீத தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. இந்நிலையில் , தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகள் உயர்கல்வி பயில வசதியாக, அவர்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களை பள்ளித் தலைமை ஆசிரியர் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி பகுதியில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எம்எல்ஏ வின் 72வது பிறந்த நாள் விழா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் எம்.ஜி.ஆர் மன்றச் செயலாளர் வி.பி.பழனிசாமி தலைமையில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் அதிமுக முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வடக்குபேட்டை பகுதியில் அமைந்துள்ள தண்டுமாரி அம்மன் கோவில் குண்டம் இறங்கும் திருவிழா விமரிசையாகத் தொடங்கியது. இதற்கான பணிகள் நேற்று முன்தினம் இரவு முதல் தொடங்கிய நிலையில், நேற்று காலை கோவிலின் தலைமை பூசாரி முதலில் குண்டம் இறங்கி விழாவைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று பக்திப் பெருக்குடன் குண்டம் இறங்கி வருகின்றனர்.

# WFH for two days, no foreign travel for govt officials: Delhi govt's big move amid USIran war fallout




*Delhi chief minister Rekha Gupta has announced two days of work from home government employees, use of online meetings, and minimum use of vehicles as part of PM Modi's austerity appeal amid geopolitical disruptions over the Middle East war.*

*She also said the private sector would be advised to implement work-from-home arrangements, adding that the labour department would monitor compliance.*

*"At government level, two days will be work from home every week," said the Delhi CM.*

*"Private sector will be advised to give work from home. Labour dept will monitor this. They should give work from home," she added.*

*The war started on February 28, disrupting shipping through the Strait of Hormuz, a key global oil transit route and triggering concerns over a wider energy crisis.*

*Delhi government ministers and senior officials on Wednesday began implementing a series of austerity and fuel-conservation measures following Prime Minister Narendra Modi's appeal to cut petroleum consumption amid the prevailing US-Iran war.*

*Earlier HT reported, sources said ministers are being encouraged to use public transport and carpool, limit the use of official vehicles and suspend foreign travel.*

*Rekha Gupta said the government has decided to reduce the use of official vehicles and encourage ministers, legislators and officials to rely more on public transport and car-pooling. Urging residents to follow suit, Gupta said a shift from private vehicles to Metro trains and buses would not only help save fuel but also reduce traffic congestion and air pollution.*

*The Public Works Department (PWD), Delhi Jal Board and the irrigation and flood control department also issued formal orders directing officials to prioritise virtual meetings, promote electric mobility and observe a weekly "No Car Day*



ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம், அந்தியூர் பேருந்து நிலையம் அருகில் எழுந்தருளியுள்ள பத்ரகாளியம்மனுக்கு தினசரி அபிஷேக அலங்கார பூஜை நடைபெறுகிறது. நேற்று (14/05/2026) அம்மனுக்கு அபிஷேகம் மற்றும் அலங்கார பூஜை நடைபெற்றது. பூஜை நிகழ்வில் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், மலைப்பகுதி கிராம மக்கள் திரளாக கலந்துகொண்டு அம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர்.

# எஸ்ஐஆர் மூலம் நீக்கப்பட்டவர்கள் அரசு நலத் திட்டங்களை பெற முடியாது: மேற்கு வங்கம், பீஹார் மாநில அரசுகள் அறிவிப்பு



கொல்கத்தா/பாட்னா: மேற்கு வங்கத்தில் முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் புதிய பாஜக அரசு கடந்த சனிக்கிழமை பதவியேற்றது. இந்த அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்கள் கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் முதல்வர் சுவேந்து அதிகாரி கூறுகையில், "அரசின் அனைத்து சமூக நலத்-திட்டங்களும் - அவை 10 ஆண்டுக்கு முன் அல்லது 30 ஆண்டுக்கு முன் தொடங்கப்பட்டவையாக இருந்தாலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எனினும், இறந்தவர்கள், சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் அல்லது இந்தியர் அல்லாத எவரும் மேற்கு வங்க மக்களுக்கான நலத் திட்டங்களை பெற அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்றார். இந்நிலையில் எஸ்ஐஆர் நடவடிக்கையின் கீழ் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை பெற முடியாது என்று மேற்கு வங்க அரசு அறிவித்துள்ளது. எனினும் எஸ்ஐஆர் நடவடிக்கையில் பெயர் நீக்கப் பட்டதற்கு எதிராக தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தவர்களுக்கு அதில் இறுதி முடிவு எடுக்கப்படும் வரை நலத்திட்ட உதவி தொடரும். அதன் பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க உணவு வழங்கல் துறை அமைச்சர் அசோக் கீர்த்தனியா கூறுகையில் "குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளவர்கள் அனைத்து அரசு திட்டங்களையும் பெறலாம். ரேஷன் அட்டைகள் சரிபார்க்கப்படும்" என்றார்.

இதுபோல் பிஹார் தலைநகர் பாட்னாவில், முதல்வர் சாம்ராட் சவுத்ரி கூறுகையில் "பிஹாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டவர்கள், ரேஷன் பொருட்கள், பிற நலத்திட்டங்கள் உட்பட எந்தவொரு அரசு சலுகையையும் பெற முடியாது. இவர்களின் வங்கி பாஸ்புத் தகங்களும் உரிய காலத்தில் ரத்து செய்யப்படும்" என்றார்.

பிஹார் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அசோக் சவுத்ரி கூறுகையில், "மாநிலத்தில் எஸ்ஐஆர் நடவடிக்கைக்கு பிறகு, ரேஷன் அட்டைதாரர்களில் இருந்து சுமார் 5 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

# கேரள முதல்வராகிறார் வி.டி.சதீசன் காங்கிரஸ் தலைமை தேர்வு



புதுடெல்லி:

கேரள காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களின் தலைவராக வி.டி. சதீசன் நியமிக்கப்படுவதாக காங்கிரஸ் தலைமை அறிவித்துள்ளது.

காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் அஜய் மக்கான், முகுல் வாஸ்னிக், கேரள மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் தீபா தாஸ்முன்ஷி ஆகியோர் டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் இன்று (வியாழக்கிழமை) செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய தீபா தாஸ்முன்ஷி, "காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மே 7-ம் தேதி திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அதில், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவரை தேர்வு செய்யும் பொறுப்பு காங்கிரஸ் தலைவருக்கு வழங்கப்படுவதாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, கேரள காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர், கேரளாவில் உள்ள காங்கிரஸ் மூத்த தலைவர்கள், எம்.பி.க்கள் உள்ளிட்டோரிடம் காங்கிரஸ் தலைவர் ஆலோசனை மேற்கொண்டார். அனைவருடனும் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், வி.டி.சதீசன் கேரள காங்கிரஸ் சட்டமன்றக் குரு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்" என தெரிவித்தார். இதன்மூலம், கேரளாவின் அடுத்த முதல்வராக வி.டி. சதீசன் பதவியேற்க உள்ளார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 140 தொகுதிகளில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) 102 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெற்றது. இதில், காங்கிரஸ் 63 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து, கேரளாவின் அடுத்த முதல்வரை தேர்வு செய்வதற்கான முயற்சிகளை காங்கிரஸ் கட்சி தீவிரப்படுத்தியது.

காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்களான அஜய் மக்கான் மற்றும் முகுல் வாஸ்னிக் ஆகியோர் கடந்த 7-ம் தேதி திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினர். இதில், காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவைத் தலைவராக அதாவது முதல்வராக யாரை தேர்ந்தெடுப்பது என்பது குறித்து ஒவ்வொரு எம்எல்ஏக்களிடமும் தனித்தனியே கருத்துகள் கேட்கப்பட்டன. இதையடுத்து, இந்த கூட்டத்தில் காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவரை தேர்வு செய்வதற்கான முழு அதிகாரத்தையும் காங்கிரஸ் தலைமைக்கு அளிக்கும் ஒருவரி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, கடந்த ஒரு வார காலமாக காங்கிரஸ் சட்டப்பேரவைக் குழு தலைவரை தேர்வு செய்வதற்கான ஆலோசனையில் கட்சித் தலைவர் கார்கே ஈடுபட்டு வந்தார். வி.டி.சதீசன், ரமேஷ் சென்னிதாலா, சன்னி ஜோசப், கே.சி. வேணுகோபால் ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவி வந்ததால் முடிவெடுப்பதில் இழுபறி நிலவி வந்தது. இந்நிலையில், வி.டி. சதீசன், கேரள காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, விரைவில் அவரது தலைமையில் கேரளத்தில் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கொளுத்தும் வெயில் காரணமாக, வெப்பநிலை குறையாமல் தொடர்ந்து 100 டிகிரி பாரன்ஹீட்டில் நிலை கொண்டுள்ளது. இந்நிலையில் கோடையில் நிலவும் வெப்பத்தை சமாளிக்க பொதுமக்கள் குளிர்பானங்கள், இளநீர், தர்பூசணியை சாப்பிட்டு வருகின்றனர். இதன்படி கோடையில், பொதுமக்களின் குளிர்ச்சியான தண்ணீர் பயன்பாட்டிற்காக ஈரோடு மாநகர் கொல்லம்பாளையம் பகுதியில் மண்பானை விற்பனை அதிகரித்துள்ளதை காணமுடிகிறது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.